

சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் 296–வது பிறந்த நாளினை முன்னிட்டு, சிவகங்கை மாவட்டம், சூரக்குளம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைந்துள்ள வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் நினைவு மண்டபத்தில், வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் திருவுருவச்சிலைக்கு அரசின் சார்பில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் 3.1.2026 அன்று மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கப்பாண்டியன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி உட்பட பலர் உள்ளனர்.

### மரக்காணம் கிழக்கு ஒன்றியம் அனுமந்தை, கீழ்புத்துப்பட்டு ஊராட்சிகளில்

# “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” பரப்புரை!

### விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ, துவக்கி வைத்தார்! தயாளன் தலைமை!

மரக்காணம் ஜன 6-

மரக்காணம் கிழக்கு ஒன்றியம் அனுமந்தை, கீழ்புத்துப்பட்டு ஊராட்சியில் நடைபெற்ற என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை நிகழ்ச்யை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., துவக்கி வைத்துநடைபெறக்கூடிய சட்டமன்றத் தேர்தலில் அனைவரும் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க உறுதிமொழி ஏற்றுக்கொள்ள வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்தார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்ற தொகுதிமரக்காணம் கிழக்குஒன்றியம் அனுமந்தை, கீழ்புத்துப்பட்டு ஆகிய ஊராட்சியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை நிகழ்ச்சி நடைபெற்றது.

மரக்காணம் கிழக்கு ஒன்றிய செயலாளர்,மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில்

விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., கலந்துகொண்டு என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை நிகழ்ச்சியை தொடங்கி வைத்து கழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்தார்.

அப்போது அவர் பேசுகையில்:

தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் தினந்தோறும் ஒவ்வொரு திட்டங்களை ஏழை எளிய மக்களுக்காக தீட்டி வருகிறார் .அந்த வகையில் பொங்கல் பண்டிகை கொண்டாடுகின்ற ஒட்டுமொத்த தமிழ் சமுதாய மக்களுக்கும் ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூபாய் 3000 பொங்கல் பரிசு தொகுப்பினை அறிவித்துத்துள்ளார்.

மேலும் தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையில் நடைபெறக்கூடிய திராவிட மாடல் ஆட்சியின் அனைத்து திட்டங்களும் ஒவ்வொரு இல்லத்திலும் ஒவ்வொரு உள்ளத்தி லும் சென்று அடைந்துள்ளது. அந்த வகையில் முதலமைச்சர் செய்த அனைத்து திட்டங்களை யும் சாதனைகளையும் ஒவ்வொரு இல்லமாக சென்று கழக நிர்வாகிகள் எடுத்து கூற வேண்டும் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் அனைவரும் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்களிப்போம் என உறுதிமொழி ஏற்றுக்கொள்ள வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.


நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார்,ஒன்றிய அவைத் தலைவர் தியாகராஜன், பொதுக்குழு உறுப்பினர் பாலகிருஷ்ணன், மாவட்ட கவுன்சிலர் புஷ்பவள்ளி குப்புராஜ், ஒன்றிய கவுன்சிலர்கள் சண்முகசுந்தரம், துர்கா தேவி கலைஞர்,நாக ஜோதி கணேஷ், தேவா, ஊராட்சி மன்ற தலைவர் ஆறுமுகம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் உதயகுமார், அனுமந்தைநிர்வாகிகள் சாந்தமூர்த்தி, கருணாகரன், பாலசுந்தரம், கிருஷ்ண மூர்த்தி, ஹரிதாஸ், மாணவர் அணி அமைப்பாளர் வினோத்குமார், திருமாறன் நாராயண துரை, கண்ணன், விஜயகுமார், விஜி, விக்னேஸ்வரன், கனக சபை, வெற்றிவேல், காசிலிங்கம் ,பாலு, சாமிநாதன் அருள் நாயகன், கீழ்புதுப்பட்டு ஊராட்சி நிர்வாகிகள் கருணாகரன் ராமலிங்கம் வெற்றிவேல் சாமிநாதன் ஷேக் கலீல், வீரமணி அன்பரசு, பாண்டுரங்கன், ஜெயமூர்த்தி, நாகராஜ், அழகநாதன், முருகன், தினகரன், ஜெய்பிரகாஷ், ஆறுமுகம், சிவப்பிரகாசம், பால ராஜா, பாரதி, தனசேகர், ராஜேந்திரன், முத்து, செல்வகுமார், சம்பத் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திராவிட பொங்கல் சமூக நீதிக்கான கிரிக்கெட் திருவிழா விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் இளைஞர் அணி சார்பில் தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டியில் கிரிக்கெட் போட்டியினை ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் துவக்கி வைத்தார். உடன் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவண்ணாமலை முருகையன்
### சனவரி 6 (2003)



திருவண்ணாமலையில் திராவிடர் கழகத்தினைத் தோற்றுவித்தவர்களில் ஒருவர். தொடக்கக் காலத்திலிருந்து கழக உறுப்பினராக இருந்தவர்.

வடஆற்காடு மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.

மூன்று முறை தொடர்ந்து சட்டப்பேரவை உறுப்பினராகப் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர். 1980ல் திருப்பத்தூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திருவண்ணாமலை நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகத்தின் சார்பில் நடைபெற்ற பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### திருச்சி தெற்கு மாவட்டத்தில்

# திராவிடப் பொங்கல் - சமூக நீதிக்கான திருவிழாக் கொண்டாட்டம் !

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு !



திராவிட பொங்கல் சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம் 31.12.2025 அன்று கழக தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கழக உடன்பிறப்புகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அறிவிப்புக்கிணங்க,

திருச்சி தெற்கு மாவட்டத்தில் மாநகர, பகுதி, ஒன்றிய, நகர,பேரூர் கழகங்களில் விளையாட்டு போட்டிகள் கீழ்கண்ட அட்டவணைப்படி 14/01/2026 வரை நடைபெறும். கலந்து கொள்ளும் அனைத்து அணிகளும், **www.dravidapongal.in.** என்ற இணையதளத்தில் பதிவு செய்திட வேண்டும். 14.01.2026 தேதிக்குள் அனைத்து போட்டிகளும் முடிக்க வேண்டும்.

ஜனவரி 14,15 ஆம் தேதி திருச்சி தெற்கு மாவட்டம் முழுவதும் ஊராட்சி, வார்டு, வட்டம் அளவில் மகளிர்களை திரட்டி, திராவிட பொங்கல் வைத்து கொண்டாடப்பட வேண்டும் அனைத்து வீடுகளிலும் முன்பு "சமத்துவம் பொங்கட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்" என எழுதி திராவிட பொங்கல் கோலமிட்டு பெண்கள் குழந்தைகளுக்கான கோலப்போட்டிகள் உள்ளிட்ட சிறு சிறு விளையாட்டுப் போட்டிகளை நடத்திட வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

| வ.எண் | நாள் | பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள் | தலைமை | போட்டிகள் | போட்டியை துவக்கி வைப்போர் |
|---|---|---|---|---|---|
| 1 | 07.01.2026 | மார்க்கெட் பகுதி | RG.பாபு | கால்பந்து போட்டி | ஆர். மணிமேகலை |
| 2. | 07.01.2026 | காட்டூர் பகுதி | O.நீலமேகம் | கால்பந்து போட்டி | ஆறு. சந்திர மோகன் |
| 3. | 07.01.2026 | மருங்காபுரி வடக்கு ஒன்றியம் | C.செல்வராஜ் | கபாடி போட்டி | என்.கோவிந்தராஜ் |
| 4. | 08.01.2026 | பாலக்கரை பகுதி | T.P.S.S.ராஜ் முஹம்மது | கால்பந்து போட்டி | எம். தமிழ்செல்வம் |
| 5. | 08.01.2026 | திருவெறும்பூர் பகுதி | S.சிவக்குமார் | கால்பந்து போட்டி | கே.கே.கே. கார்த்திக் |
| 6. | 08.01.2026 | வையம்பட்டி தெற்கு ஒன்றியம் | V.A.ராஜேந்திரன் | கபாடி போட்டி | கே. சண்முகம் |
| 7. | 09.01.2026 | கலைஞர் நகர் பகுதி | G.மணிவேல் | கால்பந்து போட்டி | பொன்.செல்லையா |
| 8. | 09.01.2026 | கூத்தைப்பார் பேரூர் | M.RT.P.K.தங்கவேல் | கிரிக்கெட் போட்டி | எஸ். பன்னீர்செல்வம் |
| 9. | 09.01.2026 | பொன்னம்பட்டி பேரூர் | K.A.நாகராஜ் | கிரிக்கெட் போட்டி | எம்.மாரியப்பன் |
| 10. | 10.01.2026 | அரியமங்கலம் பகுதி | A.M.G.விஜயகுமார் | கால்பந்து போட்டி | பி.ஏ. நூர்கான் |
| 11. | 10.01.2026 | திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம் | C.கங்காதரன் | கபாடி போட்டி | வண்ணை அரங்கநாதன் |
| 12. | 10.01.2026 | மருங்காபுரி மத்திய ஒன்றியம் | M.பழனியாண்டி | கபாடி போட்டி | லீலா வேலு |
| 13. | 10.01.2026 | மணப்பாறை நகரம் | மு.ம.செல்வம் | கிரிக்கெட் போட்டி | இரா. மூக்கன் |
| 14. | 11.01.2026 | மாநகர கழகம் | மு.மதிவாணன் | சைக்கிள் போட்டி | அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி |
| 15. | 11.01.2026 | துவாக்குடி நகரம் | E.காயாம்பு | கிரிக்கெட் போட்டி | V.தனசேகரன் |
| 16. | 11.01.2026 | மணப்பாறை ஒன்றியம் | C.ராமசாமி | கபாடி போட்டி | கவிஞர் சல்மா |
| 17. | 12.01.2026 | மலைக்கோட்டை பகுதி | R.மோகன் | கால்பந்து போட்டி | உ.ராஜேஸ்வரன் |
| 18. | 12.01.2026 | பொன்மலை பகுதி | E.M.தர்மராஜ் | கால்பந்து போட்டி | கே.சி.பழனிச்சாமி |
| 19. | 12.01.2026 | வையம்பட்டி வடக்கு ஒன்றியம் | R.சீரங்கன் | கபாடி போட்டி | இரா. குணசேகரன் |
| 20. | 13.01.2026 | மருங்காபுரி தெற்கு ஒன்றியம் | C.சின்னடைக்கன் | கபாடி போட்டி | பி.எம்.சபியுல்லா |
| 21. | 14.01.2026 | திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் | K.S.M.கருணாநிதி | கபாடி போட்டி | கே.என்.சேகரன் |
| 22. | 14.01.2026 | மாவட்ட கழகம் | மாவட்ட செயலாளர் | வாலிபால் | அமைச்சர் ஆர். காந்தி |

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக தொண்டர்கள் என அனைவரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி,**
**பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்,**
**மாவட்ட கழக செயலாளர்,**
**திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.**



விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றியம், எடப்பாளையத்தைச் சேர்ந்த கே.சிவராஜ் த/பெ குப்புசாமி, கத்தார் நாட்டில் சிக்கித் தவிப்பதாக அவரது குடும்பத்தினர் வைத்த கோரிக்கையை ஏற்று, கழக அயலக அணி உதவியுடன் சிவராஜ் அவர்களைப் பத்திரமாகத் தாயகம் அழைத்து வர விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று நேரில் சென்று விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன் கௌதமசிகாமணி ஆறுதல் கூறி உறுதியளித்தார். 31.12.2025 அன்று தாயகம் திரும்பினார். அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டார் அவரும் அவரது குடும்பத்தினரும் நேரில் முதல்வர் தளபதியார் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், கழக துணைப் பொதுச்செயலாளர், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்.